# JUDICIAL MAGISTRATE COURT NO.II CHENGALPATTU

## CC No. 785/2022

## DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)

*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.II CHENGALPATTU. |
| Deposition of witness for | : LW-1/PW-1 |
| Name | : அம்பிகாபதி |
| Father/Husband's Name | : ஜம்புலிங்கம் |
| Village | : கொளப்பாக்கம் |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : 52 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 04.02.2025.

**முதல் விசாரணை—**

நான் கொளப்பாக்கத்திலுள்ள சூப்பர் ஆட்டோ போர்ஜ் கம்பெனியில் HR ஆக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 12.09.2021 ஆம் தேதி நான் வேலையில் இருந்தபோது கம்பெனி பராமரிப்பு பிரிவில் இருந்த UPS மற்றும் பேட்டரிகள் காணவில்லை என்று Maintainence Assistant Manger அருண் என்னிடம் தெரிவித்தார். அதனால் கம்பெனியிலுள்ள சிசிடிவியில் ஆய்வு செய்து பார்த்தோம். அப்போது 12.09.2021 ஆம் தேதி கம்பெனியில் வேலை செய்யும் ஆஜர் எதிரி கோபிநாத் பேட்டரிகளை கழட்டி டிராலி மூலமாக கம்பெனிக்குள் இருந்து எடுத்துவந்து TN 85B 6051 என்ற பதிவெண் கொண்ட மினி லாரியில் ஏற்றி எடுத்து சென்றது தெரிய வந்தது. மேற்படி மினி லாரியை ஓட்டிய நபர் தற்போது ஆஜரிலிருக்கும் மற்றொரு எதிரியான திருமலை. மேற்படி இருவரும் கம்பெனிக்கு சொந்தமான பொருட்களை களவாடிச் சென்றுள்ளனர்.

7 UPS பேட்டரிகள், 2 இன்வெர்டர்கள் ஆகியவற்றை களவாடிச் சென்றுள்ளனர். மேற்படி களவாடிய சொத்துகளின் மதிப்பு ரூ. 90,000/- ஆகும். மேற்படி களவாடிய சொத்துகளை மீட்டு தருமாறும் மற்றும் எதிரிகளை கைது செய்யுமாறும் ஓட்டேரி காவல் நிலையத்தில் 13.09.2021 ஆம் தேதி புகார் அளித்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்ததுதான். மேற்படி **புகாரானது அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு** செய்யப்படுகிறது. மறுநாள் 14.09.2021 ஆம் தேதி கோபிநாத் மற்றும் திருமலையை அவர்கள் ஓட்டி சென்ற லாரியுடன் வண்டலூர் உயிரியல் பூங்கா அருகே இருந்தவர்களை பிடித்து விசாரிக்க அவர்கள் மேற்படி பொருட்களை விற்பதற்காக செல்வதாக என்னிடம் தெரிவித்தார்கள். பிறகு நானும், ஸ்ரீதரும் அவர்களை ஓட்டேரி காவல் நிலையத்தில் ஒப்படைத்தோம். களவாடிய பொருட்களான 7 UPS பேட்டரிகள் மற்றும் 2 இன்வெர்டர்களையும் நான் நீதிமன்றத்தில் உரிய மனு செய்து பெற்றுகொண்டேன். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்திலுள் பொருட்கள் நான் மனு செய்து பெற்றுகொண்ட பொருட்கள்தான். மேற்படி **பொருட்கள் சா.பொ. 1 வரிசைகளாக குறியீடு** செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரணை செய்தனர்.

**குறுக்கு விசாரணை**

என்னுடைய கம்பெனி மேற்படி புகாரை கொடுப்பதற்காக அனுமதி அளிக்கப்பட்டிருந்தது. மேற்படி புகாரை நான் காவல் நிலையத்தில் தயார் செய்தேன். என்னுடைய கம்பெனிக்கு ஒரு மெயின் கேட். சுமார் 80 சிசிடிவி கேமராக்கள் கம்பெனிக்கு வெளியேயும், உள்ளேயும் பொருத்தப்பட்டுள்ளது. அந்த கேமராக்களில் கம்பெனி உள்ளே யார் வருகிறார்கள், போகிறார்கள் என்பது பதிவாகும். மெயின் கேட் அருகில் செக்யூரிட்டி அறை உள்ளது. சுமார் 4 செக்யூரிட்டிகள் மெயின் கேட்டில் இருப்பார்கள். இந்த 4 செக்யூரிட்டிகளும் கம்பெனிக்குள்ளே யார் சென்றாலும் அவர்களை சோதனை செய்து அனுப்புவார்கள்.

அதேபோல் வெளியே வரும் நபர்களையும் சோதனை செய்து அனுப்புவார்கள். அதேபோல் வாகனங்களையும் முழுமையாக சோதனை செய்துதான் உள்ளே மற்றும் வெளியே அனுப்புவார்கள். எங்களது கம்பெனியில் 4 ஷிப்ட் கணக்கில் வேலை செயல்பட்டு வருகிறது. ஒரு ஷிப்டுக்கு 300 பணியாளர்கள் வேலை செய்வார்கள். என்னுடைய கம்பெனி பொருட்களை உள்ளே மற்றும் வெளியே எடுத்து செல்வதற்கு சுமார் 10 மினி லாரிகள் ஒப்பந்த அடிப்படையில் நியமித்துள்ளோம். முதல் விசாரணையில் சொல்லியுள்ள லாரி என்னுடைய கம்பெனியின் ஒப்பந்த வாகனம். அந்த வாகனம் LK டிரான்ஸ்போர்ட் என்ற கம்பெனிக்கு சொந்தமானது. அதன் உரிமையாளர் சுகுமார். எங்கள் கம்பெனியில் பொருட்களை வெளியே அனுப்புவதற்கு Despatch ஸ்டோர்ஸ் டிபார்ட்மெண்ட் உள்ளது. அதேபோல் வெளியிலிருந்து வரும் பொருட்களை வாங்கி வைப்பதற்கு Receiving ஸ்டோர்ஸ் டிபார்ட்மெண்ட் உள்ளது. மேற்படி 2 டிபார்ட்மெண்ட்களுக்கும் தனித்தனியே பணியாளர்கள் உண்டு .

வெளியே போகும் பொருட்களுக்கும், உள்ளே வரும் பொருட்களுக்கும் Delivery Challan-ன் அடிப்படையில் தான் அனுமதி கொடுக்கப்படும். இந்த 2 டிபார்ட்மெண்ட்களுக்கு தெரியாமல் எந்த பொருளும் கம்பெனியில் இருந்து வெளியேயும், வெளியில் இருந்து உள்ளேயும் வர இயலாது என்றால் சரிதான். பொதுவாக கம்பெனியின் பொருட்களை டெலிவரி செய்துவிட்டு, டெலிவரி செய்ததற்கான அத்தாட்சியை ஒப்படைத்த பிறகுதான் நாங்கள் பணத்தை வாகன உரிமையாளரிடம் கொடுப்போம் என்றால் சரிதான். 12.09.2021 ஆம் தேதி எங்களுடைய கம்பெனிக்கு சொந்தமாக பொருட்களை டெலிவரி செலானுடன் முதல் விசாரணையில் சொல்லியுள்ள வாகனத்தில் ஏற்றி பெங்களூரிலுள்ள எங்களது கம்பெனிக்கு அனுப்பி வைத்தோம் என்றால் சரிதான். மேற்படி பொருட்களை பெங்களூரில் ஒப்படைத்துவிட்டு 2 வது எதிரி ஒப்படைத்ததற்காக ஆவணத்தை 14.09.2021 ஆம் தேதி என்னிடம் காண்பித்தார் என்றால் அந்த விவரம் ஸ்டோர்ஸ் டிபார்ட்மெண்ட் ஸ்ரீதர் என்பவருக்குதான் தெரியும்.

அதேபோல் கம்பெனியில் டெலிவரி செலானை ஒப்படைத்ததற்கான ஆதாரம் கம்பெனியில் உள்ளது.

எங்களது கம்பெனிக்கும் வண்டலூர் உயிரியல் பூங்காவிற்கும் 4 கிலோமீட்டர் தொலைவு இருக்கும் . வண்டலூர் உயிரியல் பூங்கா மற்றும் அதன் அருகாமையில் உள்ள கிரெசண்ட் கல்லூரி அருகில் சிசிடிவி கேமராக்கள் பொருத்தப்பட்டிருக்கும் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. அந்த இடத்தில் சுமாராக ஒரு 5 போலீசார் பணியில் இருப்பார்கள் என்றால் சரிதான். பொதுவாக பணியாளர்கள் கம்பெனியில் பணி செய்வதற்காக வருகை பதிவேடு பராமரித்து வரப்படும். ஒப்பந்த தொழிலாளர்களுக்கும் வருகை பதிவேடு பராமரித்து வரப்படும் என்றால் சரிதான். நான் கொடுத்த புகாரோடு கம்பெனியில் உள்ளதாக சொல்லப்படும் சிசிடிவி பதிவேடுகளை நான் போலீசாரிடம் கொடுத்தேனா என்றால் இல்லை. முதலாவது எதிரி ஒப்பந்த தொழிலாளி. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் சமயத்திலிருந்து ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்பாகவே இந்த கம்பெனியில் முதலாவது எதிரி தொழில் செய்து வருகிறார் என்றால் சரிதான். அவருடைய சம்பளத்தை ஒப்பந்த உரிமையாளரிடம் கொடுத்து விடுவோம்.

ஒரு பணியாளரை நிரந்தரம் செய்வதற்கு அவர் 240 நாட்கள் பணி செய்ய வேண்டும் என்றால் கிடையாது. அவர் 480 நாட்கள் பணி செய்ய வேண்டும். முதலாவது எதிரி ஒன்றரை வருட காலமாக கம்பெனியில் வேலை செய்தார் என்றும், அதனால் அவரை நிரந்தர பணியாளர் ஆக்க வேண்டும் என்று அவர் கேட்டபோது அவரை கம்பெனியில் இருந்து வெளியேற்றுவதற்காக நடக்காத சம்பவத்தை நடந்தது போல் ஒரு பொய்யான புகாரை ஜோடித்து நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. உண்மையிலேயே சம்பவம் நடைபெற்று இருந்தால் சிசிடிவி பதிவேடுகளை கொடுத்திருப்பேன், ஆனால் அவ்வாறு நடக்காததனால் தான் சிசிடிவி பதிவேடுகளை கொடுக்காமல் மறைத்துவிட்டேன் என்றால் சரியல்ல.

களவு போனதாக சொல்லப்படும் பொருட்களுக்கும் எங்களது கம்பெனிக்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல. களவு போனதாக சொல்லப்படும் பொருட்கள் எங்கள் கம்பெனிக்கு சொந்தமானது என்பதை நிருபிப்பதற்காக Invoice போலீசாரிடம் கொடுத்துள்ளேன்.

அவ்வாறு நான் கொடுக்கவில்லை என்றும் , தற்போது கொடுத்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. LK டிரான்ஸ்போர்ட் என்ற நிறுவனம் 4 வருடங்களாக எங்கள் நிறுவனத்தோடு ஒப்பந்தத்தில் உள்ளனர். 2 வது எதிரியும் அந்த லாரியை 4 வருடங்களாக ஓட்டி வருகிறார். மேற்படி 2 வது எதிரியும் 4 வருடங்களாக கம்பெனிக்கு லாரியை ஓட்டி வருகிறார் என்பதனால் அவரும், அவரது பணியை நிரந்தரமாக்க வேண்டும் என்று என்னிடம் கோரிக்கை வைத்ததால் அவரையும் பணியிலிருந்து வெளியேற்ற வேண்டும் என்பதற்காக இந்த புகாரை அவர் மீதும் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. முதல் விசாரணையில் 12.09.2021 ஆம் தேதி ஆஜர் எதிரிகள் பொருட்களை களவாடி சென்றுவிட்டனர் என்றும், 14.09.2021 ஆம் தேதி 3 கிலோமீட்டர் தொலைவிலேயே அவர்களை பிடித்துவிட்டு, ஒப்படைத்துவிட்டோம் என்று சொல்வது நம்பக்கூடியது அல்ல என்று சொன்னால் சரியல்ல. 13.09.2021 ஆம் தேதி கோபிநாத் கம்பெனிக்கு வேலைக்கு வந்தாரா என்றால் இல்லை. கம்பெனியில் வருகை பதிவேடு பார்த்தால் அந்ததேதிக்கு அவர் பணியில் இருந்தாரா, இல்லையா என்று தெரிய வரும் என்றால் சரிதான். எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல. அதேபோல் சான்றுபொருட்களுக்கும் , எங்கள் கம்பெனிக்கும், எதிரிகளுக்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

நான் பொய்யான ஒரு புகாரை கொடுத்து அதற்கு அனுசரணையாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. புகார் கொடுத்த நாளன்று எனக்கு கம்பெனியில் இருந்து புகார் கொடுப்பதற்கு எந்த அதிகாரமும் வழங்கப்படவில்லை என்றால் சரியல்ல.

sd/-xx

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/-R.D. Aarthi,
Judicial Magistrate No.II,
Chengalpattu.